புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, சாலை ஓரங்களிலே இருக்கிற புளிய மரங்களை வெட்டி, மொட்டையாக்கி விடுகிறார்கள். இதனால் பாதசாரிகளுக்கு நிழல் தராத நிலை ஏற்பட்டு, அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானமும் போய்விடுகிறது. எனவே, புளிய மரங்களை வெட்டாமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற நடவடிக்கைகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

Memorandum from Dhobies Association

* 296 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether this Government have received a memorandum from "The Tamil Nadu Salavai Thozilalar Munnetra Sangam" during the month of February 1970; and

(b) if so, the details thereof and the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) விவர அறிக்கையொன்று@ மன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : In the detailed statement, certain points had been clarified but certain things have not been clarified, such as the assurance given by this Government to the Dhobies that they would be given opportunity to get these basic materials sold through co-operatives at controlled rates. That is not being done and co-operatives are not functioning. May I know from the Hon. Minister whether loans are given for construction of dhobikhanas. It is mentioned here that Rs. 5 lakhs would be issued. The Hon. Minister said that he would himself visit Dhobikhanas and see how they are functioning. May I know whether steps have been taken by this Government to see that they are properly functioning, whether the grievances of dhobies such as power laundries, for which money was granted, whether all these things will be taken into consideration ? Will the Hon. Minister be pleased to tell us the steps taken in this direction ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் துறைகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் அரசாங்கம் தந்து வருகிறது என்பதை ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். அதிலே சில கட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன. சலவைத் துறைகளைக் கட்டி அவற்றை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் தந்து விடுகிறோமே தவிர அவற்றை நிர்வகிப்பதில் அரசு எந்தவிதமான செலவையும் வைத்துக் கொள்ளவில்லை. இயந்திரச் சலவை அமைப்பதில் சென்னையில் ஒன்று ஏற்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டு அதற்குக் கட்டடம் போன்ற வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இதற்காக கூட்டுறவு சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு நிலம் கூட 10

@ 101-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கிரவுண்ட் வாங்கியிருக்கிறார்கள். அதற்கான கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலைகள் நடந்து முடிந்த பிறகு இயந்திர சலவை வரும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். சரியான விலைக்கு அவர்களுக்குப் பொருட்கள் கிடைக்க வில்லையென்று சொன்னார்கள். அவையெல்லாம் கிடைப்பதற்குக் கூட்டுறவுத் துறை மூலம் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சலவைத் துறைகள் அநேகமாக ஆற்றையும் குளத்தையும் ஒட்டியே இருக்கின்றன. ஆற்றோரங் களிலேதான் அவர்கள் தங்களுடைய தொழிலைச் செய்வதற்கு துணி துவைப்பது மற்ற காரியங்கள் செய்வது போன்றவற்றிற்கு வசதி யாக இருக்கிற காரணத்தினால் ஆற்றோரங்களிலே அவர்களுக்கு வீடுகள் இருந்தால் நல்லதாக இருக்கும். ஆற்றோரங்களிலே வீடு கள் கட்டிக் கொடுக்கவோ அல்லது அவர்கள் வீடுகள் அங்கு கட்டிக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கவோ அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த அரசு வீடற்ற ஏழை களுக்கு வீட்டு மனைகள் பட்டாக்கள் வழங்கியிருப்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அரசு சம்பந்தப்பட்ட மனைகள் இருந்தால் அவை வேண்டுமென்று அரசை அணுகிக் கேட்பார்களானால் அவற்றைப் பரிசீலிக்க அரசு தயாராக இருக் கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையிலே இந்த வருடம் மார்ச் மாதத்திலே அந்தத் தொழிலாளர்கள் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் ஊர்வலமாகத் திரண்டு வந்து இதுபற்றி மகஜர் கொடுத்திருக் கிறார்களே, இப்பொழுது சொன்ன பதிலில் அது உள்ளதா? நவீன மான முறையிலே டோபி கானா மதுரையிலே உடனடியாகக் கட்டு வதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மதுரை நகராட்சி யினுடைய விண்ணப்பம் இன்னும் அலுவலகத்திற்கு வந்து சேர வில்லை. அதுபற்றி வந்தவுடன் ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : கிராமப் பகுதிகளிலே உள்ள சலவைத் தொழிலாளர்கள் தேர்தல்கள் வந்தால் அவதிப்படுகிறார்கள். கட்சி செல்வாக்குப் பெற்றவர்கள் தான் விரும்புகின்றவருக்கு ஏன் ஓட்டளிக்கவில்லை, எதிர்ப்பவருக்கு ஓட்டளிக்கக் கூடாது என்றெல் லாம் நிர்பந்தப்படுத்தி பிறகு அவர்கள் வீடுகளுக்குப் போகக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு போடுகிறார்கள். இதனால் அவர் கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிக் கட்டுப்பாடு விதிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிக் கட்டுப்பாடு இருப் பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.